தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண், 415.

ஸ்ரீ:

ராமபாரதியின்

தமிழிசைப் பதங்கள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2000

விலை. ரூ. 10—00

T. 22522

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண், 415.

ஸ்ரீ:

ராமபாரதியின்

தமிழிசைப் பதங்கள்

பதிப்பாசிரியர்:

வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்

என். ஸ்ரீநிவாசன்

ஸம்ஸ்க்ருத பண்டிதர்

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2000 விலை. ரூ. 10—00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	ராமபாரதியின் தமிழிசைப் பதங்கள்
பதிப்பாசிரியர்	:	என். ஸ்ரீநிவாசன்
வெளியிடுபவர்	:	இயக்குநர். சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	415
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	மார்ச், 2000
தாள்	:	16. 2 கி.கி. டி.என்.பி.எல்.
நூல் அளவு	:	24 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	54
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	இசை – நாட்டிய – நூல்
விலை	:	ரூ. 10—00

வெளியீட்டாளர் முகவுரை

இந்திய நுண்கலைகளை அயல் நாட்டினரும் விருப்பிக் கற்று தங்களது நாடுகளில் பரப்பிவருகின்றனர். குறிப்பாக பரத நாட்டியக்கலை தமிழகத்தில் சிறந்து விளங்கியது; இன்றும் விளங்கிவருகிறது. இத்தகைய நாட்டியக் கலையில் பல்வேறு வகைப்பட்ட பாடல்களைப் பாடி அதற்கு உரிய அபினயத்துடன் ஆடி மகிழச் செய்வார்சள். இத்தகைய பாடல்களில் நாட்டிய நிகழ்ச்சிகளுக்காகவே இயற்றப் பெற்ற பாடல்கள், பதங்கள், ஜாவளிகள், தில்லானாக்கள், தருக்கள் என்பவையாகும். இப்பாடல்கள் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளில் அமைந்திருந் தாலும் அதிக அளவில் தெலுங்கு மொழிப் பாடல்களையே கலைஞர்கள் கையாண்டு வருகின்றனர்.

"ராமபாரதியின் தமிழிசைப் பதங்கள்" என்னும் இந்த நூல் இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் தஞ்சை மராட்டிய மன்னன் அவைப் புலவரால் இயற்றப்பட்ட பழஞ்சிறப்பு வாய்ந்த பதங்கள். இப்பதங்கள் யாவும் தெலுங்கு எழுத்துக்களில் எழுதப்பட்டு பனையோலைச் சுவடியாகவே இருந்துள்ளன. இப்போதுதான் முதன் முதலாக அச்சிடப்பெற்று நூல் வடிவில் வெளிவருகிறது. இசையாராய்ச்சி செய்வோருக்கும், நாட்டியக் கலைஞர் களுக்கும் இந்நூல் மிகுந்த பயனளிக்கும். இந்நூலகத்தின் வடமொழிப்பண்டிதர் திரு. என். சீனிவாசன் அவர்கள்

சிறந்த ஆய்வு முன்னுரையுடன் இந்நூலை வெளியிட்டு உள்ளார். அவரது இசையனுபவமும், பதிப்புப் பணியின் அனுபவமும் பலருக்கும் உதவும் வண்ணம் சிறப்பாகச் செய்துள்ளார். திரு. என். சீனிவாசன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்த நூலை நுண்ணாய்வு செய்து அளித்தவர் இசை ஆராய்ச்சி அறிஞர் திரு. பி. எம். சுந்தரம் அவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூல் வெளியிடப் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்தும், இந்த நூல் விரைவில் வெளிவரத் துணைபுரிந்த இந்த நூலக நிருவாக அதிகாரி திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், பதிப்புத்துறை மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

சரசுவதி மகால் நூலக வெளியீடுகளில் இசைத்துறைக் காக எழுந்த இந்த நூலை இசை ஆராய்ச்சியாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வாங்கிப் படித்துப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

முனைவர். மூ. இராசாராம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும் இயக்குநர்.
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
24—3—2000.

அணிந்துரை

தஞ்சையை ஆண்ட மராத்தியப் பெருமன்னனும், கவிக்கோவுமாகிய இரண்டாம் ஷாஹ்ஜியின் அவையை அலங்கரித்த புலவர்களிலொருவரான பஞ்சநதம் இராமபாரதி படைத்த தீந்தமிழ்ப் பதங்கள் பலவற்றி லிருந்து சுமார் முப்பது பதங்களைப் பதிப்பிக்கக் கருதித் தொகுத்துள்ளார், ஸரஸ்வதி மஹால் நூலகத்து வடமொழிப் பண்டிதர் திரு என். ஸ்ரீநிவாஸன் அவர்கள். இசையின் முதுகெலும்பான ராகத்தின் சுவையைப் பிழிந்து தருபவை பதங்களின் இசைவடிவங்கள். சிருங்காரச் சுவை செறிந்திருத்தலால், நடனத்தின் உயிர்மூச்சான அபிநயத்துக்கு அவை ஏற்றவை, பதிப்பாசிரியர், ஆய்வு தோய, ஒரு தெளிவான முகவுரையைத் தந்துள்ளார். அதில் 'பதம்' எனப்பெறும் பாடலின் அமைப்பு, தன்மை, இதரக் கூறுகள் என்று பயனுள்ள செய்திகள் பல கூட்டி யிருக்கிறார். பதங்களைப் போலவே இந்த முகவுரையும், படிப்போருக்கு இன்பச் சுவை நல்குவதாய் அமைந்துள்ளது. இராமபாரதியின் பதங்களில் 'பச்சைச் சிருங்காரம்' மலிந் துள்ள பலவற்றை. விரசங் கருதி, இத்தொகுப்பில் விலக்கி விட்டதாகப் பதிப்பாசிரியர் முகவுரையில் குறிப் பிட்டுள்ளார். கவிதை மற்றும் கலைத்துறையினர் துய்த்திட இத்தொகுப்பு போதுமானது, ஆயினும் பன்னெடுங்காலமாகச் சுவடிகளிலேயே வாழ்ந்து, வெளியொளி காணாது நிற்கும் இராமபாரதியின் இதரப் பதங்கள், அவை, பச்சைச் சிருங்காரம் தோய்ந்தவை என்ற ஒரே காரணத்தால் ஒதுக்கப்பட்டு, விலக்கப்பட்டு, மடிந்து மறைந்து போய்விட நேருமோவெனும் ஐயந் தவிர்க்க, அவற்றை அடுத்த பதிப்பாக வெளியிட்டால்

அவை அழியாமற் பாதுகாக்கப்படும் — நிலைபெறும். இப்போது பதிப்பிக்கப்பட்டிருப்பவை, அபிநயத்துறை யினருக்கும் பெரிதும் பயன்படுபவை. அதற்கேற்ற விதமாகப் பதிப்பாசிரியர், அவற்றை அறிமுகஞ்செய்து, விளக்கும் முறை பாராட்டத்தக்கது. மேலும், இரு பொருளுடன் வந்துள்ள ஐந்தாம் பதத்திற்கு பொருளுடன் (அனுபந்தம்) விளக்கியிருப்பது கலைஞர்களுக்கு அபிநயம் செய்ய உதவும், இந்நூல் அச்சில் வெளிவருகையில், இசை, நாட்டியம் மற்றும் கவியுலகச்சுவைஞர்களும் கலைஞர்களும் இராமபாரதி என்றொரு பெரும் புலவனிருந்ததையும், அவன் யாத்த அரும்பாடல்களையும் அறிந்துகொள்ளத் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

பாண்டிச்சேரி,
23—3—2000.

B. M. சுந்தரம்,
இசை ஆராய்ச்சியாளர்.

முகவுரை

தஞ்சையை அரசாண்ட சோழ - நாயக்க - மராட்டிய மன்னர்கள் பல இலக்கியங்களை உருவாக்கியும், பல கலைஞர்களுக்கு ஆதரவு நல்கியும், அவர்கள் வாயிலாக நமது தொன்மைவாய்ந்த பண்பாண்டைக் காத்தும் உள்ளனர். இவர்களில் மராட்டிய மன்னர் இரண்டாம் சகஜி (கி. பி. 1684—1711) தன் ஆட்சி காலத்தில் தனது முன்னோர்களைப் போலவே பாரம்பரியக் கலைகளைப் போற்றி வளர்த்துள்ளார்; பல கலைஞர்களை ஆதரித்து உள்ளார் என்பது சரித்திரம் கூறும் உண்மையாகும். இவர் பெரும் இயற்புலவராகவும், இசைப் பாடலாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். இம்மன்னர் தாமே இயற்றியுள்ள பதங்கள் 208. இசை நாடகங்கள் 22. இவரது பதங்களைக் கீழே காணும் வண்ணம் பிரிக்கலாம்.

பக்திப்பதங்கள்	— 50
பாவபதங்கள்	— 5
வைராக்யபதங்கள்	— 9
சிருங்காரபதங்கள்	— 103
ஹாஸ்யபதங்கள்	— 14
நீதிப்பதங்கள்	— 24
மங்களப்பதங்கள்	— 3
	208

மன்னன் பெரும் புலவனாகவும், கலைக் காவலனாகவும் விளங்கியதால் புலவர்களின் கூட்டமும், கலைஞர்களின் கூட்டமும், தஞ்சையைப் புகலிடமாகக் கொண்டன.

அவர்கள். தங்களால் கலையையும், கலையால் தங்களையும் மேம்படுத்திக்கொண்டனர். அங்ஙனம் தஞ்சையைப் புகலிடமாகக்கொண்டு, மன்னர் சகஜியின் அவைப்புலவராக வாழ்ந்தவர் 'பஞ்சநதம் ராமபாரதி' என்பவராவார்.

புலவர் வரலாறு

பஞ்சநதம் ராமபாரதியைப் பற்றி அறிய எந்த செய்தியும் கிடைக்கவில்லை, இவர் சிறந்ததொரு கவிஞர் என்பதனை இவரியற்றியுள்ள பதங்கள் வாயிலாக மட்டுமே அறியமுடிகிறது. இவரது பதங்களில் சிறந்த யாப்பிலக்கணப் புலமையும், அலங்கார சாஸ்த்திரத்தில் உள்ள ரஸ-பாவமும், இசைத்துறையின் ராக-ரஸ-ஸ்வர-தாளஞானமும், நாயக-நாயகி (தலைவன் - தலைவி) பற்றிய நுண்ணிய செய்திகளையும் நன்கு உணர்ந்துள்ளார் என்றும் அறியலாகும்.

இதன் காரணமாகவே சகஜி மன்னர் ராமபாரதியை மிகவும் ஆதரித்திருந்தார் என்பதும், இவர் திருவையாற்றில் வாழ்ந்துள்ளார் என்பதும் அறிய முடிகிறது.

ராமபாரதியின் இந்தப் பத சாகித்தியங்களைத் தவிர இவரது பெயரால் வேறு எந்த நூலோ அல்லது சாஹித்தியங்களோ கிடைக்கவில்லை. இவர் "பத சாஹித்திய கர்த்தா" என்பது மட்டும் அறியமுடிகிறது.

தமிழ்ப் பதங்களையும் - கீர்த்தனைகளையும் இயற்றிய முத்துத்தாண்டவருக்கு அடுத்த நிலையில் வாசுதேவகவி,

ராமபாரதி, முத்துக்கவிராயர் போன்ற புலவர்கள் சகஜியின் காலத்தில் வாழ்ந்தமையால் காலத்தால் முத்துக் கவிராயருக்குப் பின்வந்த பதங்களாக ராமபாரதியின் தமிழ்ப்பதங்களைக் குறிப்பிடலாம். இவருடைய பதங்களில் முன்னெதுகை — பின்னெதுகை போன்ற பல்வேறு செய்திகளையும் தாங்கி அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இவர் காலத்து தமிழ்ப் பத சாஹித்ய கர்த்தாக்கள்

ராமபாரதியின் காலத்தில் வாழ்ந்த தஞ்சை அரசவைப் புலவர்களில் முத்துக்கவிராயர், மகாகவி சப்தரிஷி, வாசுதேவகவி ஆகியோர் குறிப்பிடத்தக்கோர். வாசுதேவ கவியும், ராமபாரதியுமே சிருங்காரப் பதங்களைப் பாடியவர்கள். முத்துக்கவிராயர் சில பதங்களைப் பாடியுள்ளார் என்று தெரிகிறது. அவரது பாடல் ஒன்றில் "முத்துக்கவி பதம் பாடி முல்லை மல்லிகை மலர் சூடி" என்ற வரிகள் அகப்படுவதால் இவர் தமிழில் பதம் இயற்றியிருக்கலாம் என்று கருத முடிகிறது. ஆயின் இவரது இதரப் பதங்கள் கிடைக்கவில்லை.

மேலும், இந்த முத்துக்கவிராயரும், மஹாகவி சப்தரிஷியும் இயற்றியுள்ள தமிழ் மொழிக் குறவஞ்சி நாட்டிய நாடகங்களே காலத்தால் முந்தியவை என்பது இங்கு குறிப்பிடுதல் பொருத்தம்.

தஞ்சை அரண்மனையில் நடைபெற்ற நடன நிகழ்ச்சிகளும், அவற்றின் காலமும்:

தினந்தோறும் நடனம், இசை நாடகம், சங்கீத விநிகைகள் ஆகிய நிகழ்ச்சிகள் அரசவையிலேயே நடை

பெறுவதுண்டு. இதில் பண்டிதர்கள் முதல் பாமரர்கள் வரை அனைவரும் கண்டும், கேட்டும், களிப்பெய்தலாம். ஆனால் மன்னர்கள் இன்பமாகவும், ஓய்வாகவும் பொழுதைக் கழிக்க அரண்மனையின் அந்தப்புரத்தில் (இன்று "சதர்மாடி" என்று அழைக்கப்படும் இடமாகும்) சிருங்கார நாட்டியப் பதங்கள் நடைபெறும். இது தினந்தோறும் இரவு 10 மணிக்குமேல் 2 மணிக்குள்ளாக நடைபெறுமென்றும், இதில் நடனமாடும் பெண்மணிகள் அக்கலையை நன்கு அறிந்தவர்களாயும், தேவருலகத்து அரம்பையரை நிகர்த்தவர்களாயும் இருந்தனர் என்ற செய்தியை "போசல வம்சாவளி சம்பூ" என்னும் நூல் நமக்குக் கூறுகிறது.

இசைப் பாடல்களும் அவற்றின் அமைப்பும் :

இசை பற்றி எழுந்த 'பால பாடங்களைத் தவிர' மற்றெல்லாப் பாட்டுக்களும் ஸ்வரம், தாளம், எதுகை, மோனைகளுடன் கூடிய சொற்சுவை, பொருட்சுவை ஆகியவற்றுடன் அமைந்திருக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற உறுப்புடன் கூடியவைகள் கீர்த்தனங்கள், பதங்கள், க்ருதிகள் என்று பல பெயரால் அழைக்கப் பெற்றாலும் அதில் சிற்சில வேறுபாடுகளும் உண்டு. 'கிருதி' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு உருவாக்குதல், செய்தல் என்று பொருள். 'க்ரு' என்ற மூலச் சொல்லுக்கு (कृ to do) செய் என்ற பொருள். இதிலிருந்து செய்யப் பெற்றவை, புனையப்பெற்றவை 'க்ருதி' என்று அழைக்கப் படுகிறது. பொதுவாகவே அனைத்துப் பாடல்களுமே புனையப்படுகின்ற காரணத்தால் 'கிருதி' என்பது பொதுப் பெயராயிற்று. ஆனால் கீர்த்தனைக்கும், பதத்திற்கும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று பாட்டுறுப்புக்கள்

இருந்தபோதிலும், இவ்விரண்டுக்கும் பெருத்த மாறுபாடுகள் உண்டு. அவற்றைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

கீர்த்தனம்

இவ்வகைப் பாடல்களுக்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களுண்டு. கீர்த்தனங்கள் இறைவனுடைய புகழைப் போற்றுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கும். பக்திச் சுவையுடன் கூடிய துதிப்பாடல்களாக அவை அமைக்கப்பட்டிருக்கும். இதனால் இறைவனின் புகழைப் பாடுவதே கீர்த்தனம் என்ற பொருளில் (கீர்த்தயதே இதி கீர்த்தன) காரணப் பெயராக அமைந்தது.

பதம்

நாட்டியத்திற்காகவே இயற்றப்பெற்ற பாடல்களில் பதம் என்பதும் ஒருவகை. 'பதம்' என்று அழைக்கப்படும் உருப்படி (பாடல்) சௌகாலத்தில்தான் பாடப்படும். திச்ர, திருபுடை, ஆதி தாளத்தில் 2 களை சவுக்கம் முதலிய தாளங்களில் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வகைப் பதங்கள் இசையின் ராகபாவங்களை மிக நுட்பமான முறையில் காட்டி, நமது கர்நாடக இசையின் உண்மையான ஸ்வரூபத்தை உணர்த்தக் கூடியனவாக அமைந்திருக்கும். இசையும்—அபிநயமும் ஒன்றையொன்று சார்ந்தே அமைந்திருக்கும், இதனால் பாவ-அபிநய பதங்கள் இசைக்கலை வடிவமாகப் புகழ்பெற்று இசை வல்லுநர்களாலும் கையாளப்பட்டு வருகின்றன. பதங்களின் இசை மிகச் சௌக காலத்திலேயே பாடவேண்டியுள்ளதால் அவை ராகங்களின் கமகங்களை மெதுவாகவும், அதே சமயம்

அழுத்தமாகவும் வெளிப்படுத்துவன. வீணையை மீட்டும் போது பதங்களை பாடிக்கொண்டும் வாசிப்பது தொன்று தொட்ட மரபு. பதங்களில் கமகங்கள் அதிகமாக இருக்குமேயன்றி சங்கதிகள் இரா. காரணம் கமகங்கள் நிறைந்த இசைக்கு நாட்டியமாடும் நங்கை (கலைஞர்) உரிய பாவங்களை வெளிப்படுத்த நல்வாய்ப்பாக அமையும்.

இத்தகைய "பத சாகித்தியங்களை" இயற்றக்கூடிய கவிஞர்கள் பன்மொழிகளில் நன்கு பயிற்சியுடையவர்களாகவும், அலங்கார சாஸ்திரங்களில் நல்ல பயிற்சி உடையவர்களாகவும், நாயக - நாயகியரின் விஷயங்களைப் பற்றி நன்கு உணர்ந்தவர்களாகவும், ராக-ரஸ-உணர்ச்சிகளைச் சீராகத் தெரிந்தவர்களாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் உயர்தரமான பதங்களாக அவை அமையும். சாகித்தியம் (பாட்டு) மிக எளிதாக இருப்பினும், அதில் சில பகுதிகள் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டனவாக இருக்கும். அப்படிப்பட்ட உட்கருத்துக்களை ஆடுகின்ற கலைஞர் தம் முகபாவத்தின் மூலமும் ஹஸ்த முத்திரைகளின் மூலமும் மக்களுக்கு வெளிப்படுத்துவர், இதில் பாடிய வரியையே திரும்பத் திரும்ப பாடும்போது நாட்டியக் கலைஞர் புதுப்புது விளக்கங்களைத் தனது கற்பனை நிறைந்த பாவத்தால் வெளிப்படுத்தி ரசிகர்களை மகிழச் செய்வார்.

ஒரு பதத்தை ரஸித்து அனுபவிக்க அந்தப் பாடல் யாரால் பாடப்படுகிறது? எதற்காகப் பாடப்படுகிறது? பாடுவோரின் நிலை யாது? என்பன போன்ற செய்திகளை முதலில் தெரிந்துகொள்வது உபயோகமாயிருக்கும். உயரிய பதங்களின் (பகிர் சிருங்காரம் - அந்தர் பக்தி) சாகித்யத்தைக் காணும்போது வெளிப்படையாகச்

சிருங்காரமாகவும், அதன் உட்பொருள் பக்திச் சுவையுடன் கூடியதாகவும் இருக்கும். நாயக–நாயகி பாவமே முக்கிய மான அம்சமாகக் கொண்டு இயற்றப்பட்டிருக்கும். பாடப்பாட புதுப்புதுக் கருத்துக்களையும், அபினய முத்திரைகளையும் வெளிப்படுத்தக்கூடியனவாக இருக்கும். பதங்களில் கடினமான பதப்பிரயோகங்கள் இருக்கக் கூடாது. திராக்ஷா பாகமாக பதசாகித்தியங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

பதவர்ணம்

இதுவும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறை யுடன் முத்தாயி ஸ்வர சாஹித்ய ரூபமாகவே அமைந்து இருக்கும். பல்லவி, அனுபல்லவி இரண்டிலும் இரண்டு பாகமான வர்ணமெட்டமைந்த சாஹித்தியம் அமைந்து பின் முத்தாயி ஸ்வரம் பெறும். இது சௌக்க — மத்யம காலத்திலேயே பாடப்பெறும். சரணம் சாஹித்தியமாக இருக்கும். அதையடுத்து முதலில் சௌக்க கால ஸ்வரமும், இரண்டாவது — மூன்றாவது மத்யம கால ஸ்வரமும் வரும். இதில் முத்தாயி ஸ்வரங்களுக்கெல்லாம் சாஹித்யமும் அமைந்திருக்கும். பதத்திலும், இராகமாலிகை போன்ற வற்றில் காணப்படும் விசேஷமான இராகபாவம் இதில் காணப்படும். இதில் காணப்படும் சாஹித்தியம் சிருங்கார ரஸத்தையே உணர்த்தக்கூடியதாக இருக்கும். இதில் அமைந்திருக்கும் ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் இராகபாவம் அமைந்து, தாள ஒதுக்கத்தோடு கூடியிருக்கும். வேறு பல உருப்படிகளில் காணமுடியாத இராக சஞ்சாரம் இத்தகைய பதவர்ணங்களில் காணப்படும். இவற்றில் சில சித்ரமார்க்க காலத்தில் அமைந்திருப்பது* குறிப்பிடத்தக்கது. இதன்

---

* இசையியல்: க பொன்னையா பிள்ளை

காரணமாக மாணவனுக்குத் தாளஞானமும், ராகபாவமும் தெளிவாக உண்டாவதோடு ஸ்வரம் பாடும்போது இராக பாவத்தோடுதான் பாடவேண்டும் என்ற உணர்ச்சியும் மாணவனுக்கும், பாடகனுக்கும் நன்கு ஏற்படும்.

சுரபதம்

இது பல்லவி, அனுபல்லவியோடு ஸ்வர எழுத்துக்கள் அர்த்த பாவம் (அந்த ஸ்வரங்களின் கூட்டம் பொருளுடன் அமைந்திருக்கும்) தோன்றும்படியாக நல்ல வர்ணமெட்டில் அமைக்கப்பட்டிருக்கும். பல்லவி, அனுபல்லவிகளுக்குப் பிறகு சிட்டைஸ்வரம், அதற்கு சாகித்ய (பாட்டு)மும் சேர்க்கப்பட்டிருக்கும்.

இத்தகைய அமைப்புக்களுடன் கூடிய பதவர்ணம், சுரபதம் போன்ற அமைப்புக்களில் மன்னர் சகஜி பல பாடல்களைப் பாடியுள்ளதாக இந்நூலக தெலுங்கு பண்டிதர் திரு. என். விசுவநாதன் அவர்கள் நூல்கப் பருவ இதழ் 35ல் குறிப்பிட்டுள்ளார்.

பத சாஹித்தியங்களின் வளர்ச்சி

ஆண்டவனை அடையும் வழிகளில் சிறந்த வழி நாதோபாஸனை. எனவே. இசையாலேயே இறையருளைப் பெற்றவர்கள் இந்த புண்ணிய பாரதத்தில் பலராவர். இசையால் இறைவனைப் புகழ்ந்து பாடியவர்களில் சிலர் இறைவனைத் தன் தலைவனாகவும் (நாயகனாகவும்) தன்னைத் தலைவி(நாயகி)யாகவும் கொண்டு வழிபட்டனர். இதனை நாயக—நாயகி பாவம் என்று கூறுவர். இவ்வகையில் அமைந்த பலருடைய இசைப் பாடல்கள் அகச்சான்றுகளாகக் கிடைத்துள்ளன. இறைவனை அடைவதற்கு

வழி திடமான அன்பே. அந்த அன்பும் (ப்ரேமையும்) அளவு கடந்து ததும்பவேண்டும் என்பதே அடிப்படை. நாயகன் என்ற சொல் பரமான்மாவையும், நாயகி என்ற சொல் ஜீவான்மாவையும், சகி (தோழி) என்னும் சொல் பரமான்மாவுடன் ஜீவான்மாவை இணைத்துவைக்க முயலும் ஞானகுருவையும் குறிக்கும். நாயகனைக் காணாது வருந்தும் நாயகியின் மனோநிலையும்; கடவுளைக்காணாது வருந்தும் பக்தனின் மனோநிலையும் ஒருவாறு ஒத்திருக்கும். இத்தத்துவத்தை வெளிப்படுத்துவதே ஸ்ரீமத் பாகவதத்தில் காணப்படும் ராஸகிரீடை, கோபிகாகீதம் போன்ற பகுதிகளாகும்.

நாயக - நாயகி பாவத்தில் எழுந்த முதல் இசைப் பாட்டு ஜயதேவரியற்றிய 'கீதகோவிந்த மஹாகாவியம்' இந்தப் பாடல்களே 'பதங்கள்' தோன்ற - இயற்ற முன்னோடி எனின் மிகையில்லை. இதன் அமைப்பைப் பின்பற்றித் தமிழில் முத்துத் தாண்டவரும், தெலுங்கில் க்ஷேத்ரய்யாவும், கார்வேடிநகர் சாரங்கபாணியும், கன்னடத்தில் புரந்தரதாஸரும் வேறு பலரும் பல பதங்களை இயற்றியவர்கள். இவர்களே பதசாகித்தியங்களை இப்படித்தான் அமைக்கவேண்டும் என்ற வழியை, மரபைப் புகுத்தியவர்கள். இவர்களுடைய வழியைப் பின்பற்றியே பின்வந்த புலவர்களும் பதசாகித்தியங்களை அமைத்து உள்ளனர் எனில் மிகையில்லை.

புரந்தரதாஸர் (14-15ம் நூற்றாண்டு), க்ஷேத்ரய்யா (17-ஆம் நூற்றாண்டு) போன்றோர் இறைவன் மீது பாடியுள்ள பதசாகித்தியங்களில் சில நாயக-நாயகி பாவத்தை அடிப்படையாகக்கொண்டு பாடியுள்ளனர். ஆனால் காலம் செல்லச் செல்ல இறைவனைத் தலைவனாகக்கொண்டு பாடிய கவிஞர்கள், மன்னனையோ

அல்லது ஜமீன்தார்களையோ பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடலாயினர். அங்ஙனம் தஞ்சை மன்னர் இரண்டாம் சகஜியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியவையே இந்த நூலில் காணும் பல தமிழ்ப் பதங்கள்.

இதனைக் கருதுமிடத்தில் பதங்களின் அமைப்புப் புலவனுக்கும் அரசனுக்கும் உள்ள உறவினைக் கூறுகிறது. இங்கு கலையே காதலாகிறது. சகஜி மன்னனும் சிறந்த புலவர். இருவரிடத்திலும் இருக்கும் பொதுத்தன்மை கலைக்காதலே அல்லது மொழிக்காதலே புலவனிடம் பக்தியாகின்றது. அரசர், புலவரிடையே மகிழ்ந்திருந்த காட்சியெல்லாம் கூறுகின்றனர். அரசனைக் காணமுடியாது தவிக்கும் புலவன், காதல் வயப்பட்ட பெண்போலாகிறான். அரசனின் அன்பைப் பெறவும், அருளைப் பெறவும் துடிக்கிறான். தோழியாகக் கவிதை இவனுக்குக் கை கொடுக்கிறது. தன் "கவிதைத் தோழி"யைத் தலைவ னிடத்துத் தூது அனுப்புகிறான் புலவன். அரசனும், இக்கவிதைத் தோழியின் சொல்கேட்டு மனமிரங்கிப் புலவனுக்குக் காட்சிதந்து, அருள்பாலிக்கிறான். பிரிந்தவர் கூடுகின்றனர். காதல் வெற்றிகொண்டு கலந்ததுபோல் இவர்கம் இதயத்துக்குடியிருக்கும் 'கலை'—'மொழி' ஒன்று சேர்கிறது. இலக்கிய வாழ்வில் — கலைவாழ்வில் — வெற்றி பெறுகின்றனர் என்று கருதுவதில் தவறில்லை.

தமிழில் பதங்கள்

இன்று கிடைத்துள்ள தமிழ்ப்பதங்களைக் கொண்டு கணிக்கும்போது முத்துத்தாண்டவர் இயற்றிய அபினய பதங்களே காலத்தால் பழமையானவை என்று கருத முடிகிறது. இவருக்குப் பின் வாசுதேவகவி, ராமபாரதி ஆகியோருடைய பதங்களைக் கூறலாம். இவர்களைப்

பின்பற்றியே தமிழில் பதசாஹித்தியங்களை இயற்றும் வழக்கம் ஏற்பட்டது. இங்ஙனம் இவர்களுக்குப்பின் வைத்தீஸ்வரன்கோயில் சுப்பராமையர், கனம் கிருஷ்ண ஆய்யர், மதுரகவி பாரதி, கவிகுஞ்ஜர பாரதி, மழவை சின்னஸ்வாமி பாரதி, பரிமளரங்கர், மூவாநல்லூர் சபாபதி போன்றோர் பதங்களை இயற்றியுள்ளனர். அவற்றில் பல நமக்குக் கிடைக்கின்றன, சில இன்னும் வெளியுலகில் தெரியாமலும் இருக்கலாம்.

பதங்களின் முத்திரைகள் :

பதங்களையோ அல்லது இசைப்பாடல்களையோ (சாகித்யகர்த்தாக்கள்)இயற்றியுள்ள புலவர்கள் அப்பாடல் களில் (பதங்களில் — கீர்த்தனங்களில்) தங்களது பெயரையோ அல்லது வேறு ஏதேனும் புனைப்பெயரையோ கொண்டு குறிப்பிடுவது மரபு. இதனை 'சாகித்திய கர்த்தாவின் முத்திரை' என்று இசையுலகினர் அழைப்பது வழக்கம். இதன்படி, இந்த நூலாசிரியர் தாமியற்றிய பதங்களில் புனைப்பெயரைக் குறிப்பிடாமல் "ராமபாரதி" என்று தம் பெயரையே குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சநதம் ராம கவி (பதம் — 13)
ராமபாரதி நூலால் மனம்மகிழ் சில (பதம் — 2)
ராமபாரதி போற்றிய ஏக ராஜேந்திரன்
இன்ப குமார (பதம் — 3)
ராமபாரதிமேல் நேசமாம் பூபாலன் (பதம் — 27)
ராமபாரதி விநுத (பதம் — 28)
குலவும் ராமபாரதி புகழ்ந்தருளும் (பதம் — 26)
சரஸகவி ராமபாரதி (பதம் — 23)
பைந்தமிழ் ராமபாரதி (பதம் — 22)

செந்தமிழ் ராமன் (பதம் — 21)
ராமபாரதி புகழும் ஒய்யார (பதம் — 20)
ராமபாரதி போற்றும் (பதம் — 17)
ராமகவி தமிழ் கொண்ட ராஜ (பதம் — 15)
இன்சொல் ராமபாரதி (பதம் — 11)
நாகரிக ராமகவி (பதம் — 9)
தமிழ் பாரதி சோம (பதம் — 8)
ராமகவிக்கநுகூல (பதம் — 6)

போன்ற பத சாகித்தியங்களில் காணப்படும் முத்திரை வரிகளால் அறியமுடிகிறது.

இவருடைய பதங்களில் சிறந்த அழகும், நயமும் நாட்டியத்திற்குரிய பாவங்களும் நுட்பமாக பொதிந்து உள்ளன. முன்னெதுகை - பின்னெதுகை, மோனை ஆகிய அணியிலக்கணக்களும், பழமொழிச் சொற்களும், அடுக்குச் சொற்கள், கொச்சைச் சொற்களும் காணப் படுகின்றன. அவற்றிலிருந்து சில துளிகள்:

1. முன்னெதுகையும் பின்னெதுகையும்

1. ஆடிக் கார்த்திகை பாராட்ட
வேடிக்கை யாய் மலர் சூட்ட
பாடிக் கொண்டு வீணை மீட்ட
கோடிப் பொன்னுடமை உடலில் பூட்ட
எடுப்பு; என்ன சொன்னாலும் (பதம்—1)

2. கந்தர் பன் சர மெய்ய
சந்திரன் தழல் பெய்ய
இந்த மாதர் வெய்ய
நொந்துடலம் தொய்ய
எடுப்பு: ஆசையானேனே (பதம்—2)

2. கொச்சைமொழிச் சொற்கள்

சகை, குலாகை, தெட்டிக்காலம் (8), காசாப்பு (8), சந்தோஷமாச்சுது (11), கில்லாக்கு (17) (அடைப்புக்குள் இருக்கும் எண் பதங்களின் எண்களைக் குறிக்கும்.)

சம்ஸ்கிருத மொழிச் சொற்கள்

பிரஸன்ன (12), ஸந்தத – வஸந்த (3), லவலேசம் (4), சன்னத்தமாகி (7), கரஸ்தம் (12), ப்ரும்மஹூயிஷ்ட பூமி பாலன் (24), சத்யபாஷா ஹரிச்சந்திர (10).

உவமையில் சில

அதரமோ இந்திரகோபம் (12)
அம்சம்போல் நடனமாடி (24)
அபரஞ்சிபோல் மின்னி (24)
செங்கமல மானம் (24)
சந்திரன் ரோகினியாமென (25)

சோழேசன்

சோழர்களின் நாடான தஞ்சைத் தரணியை ஆட்சி செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் "சோழன்" என்றே அழைக்கும் மரபு புலவர்களிடம் காணப்பட்டது. இதற்குச் சான்றுகள் பல உண்டு. இப் பதங்களின் பாட்டுடைத்தலைவன் சகஜி மன்னன். இவர் மராட்டியர் குலத்தைச் சார்ந்தவர். இருந்தபோதிலும் இம்மன்னன் இவன் காலத்து வடமொழி - தமிழ் இலக்கியங்களிலும், செப்பேடுகளிலும், இரண்டாம் சரபோஜி மன்னரது சல்வெட்டுக்களிலும் மராட்டிய மன்னர்களை சோழமன்னர்களாகவே குறிப்பிடுகின்றன. இம்மரபைப் பின்பற்றியே இந்த நூலாசிரியர் ராமபாரதி

அவர்களும் சகஜியை சோழேசன் என்று கூறியுள்ளார். சோழராஜ்ய பரிபாலன் (18) சோழராஜ்யாதீச (3) சோழ பூமிபால (4) சோழதேசாதிகார (10) இந்திர ! அளகை ஊர (12) தாரணிபுகழ் தஞ்சை (18) அளகை ஏகராஜன் (27)

பழமொழி :

இந்த நூலாசிரியர் தனது பதங்களில் பல இடங்களில் பழமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.
இவர் கையாண்ட பழமொழிகள் :

மா மால் வந்தது போல (2)
தக்க வைத்துக்கொண்ட சொக்குப் பொடிக்காரி (3)
அல்லும் பகலும் வந்து (8)
கல்லுமிளகப் பேசி (8)
ஏடாகோடமாக (22)
பாலும் பதக்குமோரும் பதக்காச்சு (22)
மீனமேஷயெண்ணி (23)
அயன் விதித்தவிதி (23)
ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தாற்போல (27)

அடுக்குச்சொற்கள்

இவரது பதங்களில் பல இடங்களில் அடுக்குச் சொற்கள் உள்ளன. இதனால் அபினயத்திற்கு 'ரஸபாவ'ங் களைக் காட்டமுடியும் என்பது ஆசிரியரின் கருத்தாகக் கொள்ளலாம்.

அம்மம்மா (3), ராமராம (13), சிவசிவ (23), கொஞ்சிக் கொஞ்சி (24), போம்போம் (26).

சீவகசிந்தாமணி

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிந்தாமணியில் காந்தர்வதத்தையாரிலம்பகம் என்று ஒருபகுதி வருகிறது. இதன் நாயகியைப்போல் இருப்பதாகக் கூறுவதிலிருந்து இவர் சிந்தாமணியில் பரிச்சயமுற்றவர் என எண்ணலாம் மேலும், இவர் காலத்தில் சிந்தாமணி, புலவர்களால் படிக்கப்பட்டு வந்துள்ளது என்றும் 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிந்தாமணியைப் படிக்கும் வழக்கம் புலவரிடையே இருந்துள்ளது என்பதும் புலப்படுகிறது. இவர் பதத்தில் (17) "காந்தர்வதத்தையின் மெய்ப்பு" என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்க. 5-ஆம் எண்ணுள்ள பதம் இருபொருள் வருமாறு ஓசை நயத்துடனும், இலக்கியச் சுவையுடனும் அமைந்துள்ளது படித்து ரசிக்கத் தக்கது.

சுவடியின் வரலாறு :

இந்த நூலகத்தின் சம்ஸ்கிருதப் பிரிவில் டாக்டர் பர்னல் கேட்டலாக் எண் 11649ல் ராமபாரதியின் பதங்களைக் கொண்ட சுவடி பதிவாகியுள்ளது. இதில் தமிழ் மொழியிலுள்ள இந்தப் பதங்கள் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் கையெழுத்துப் பிரதி (Copied Vol. 813) இவற்றைக்கொண்டு இந்த நூல் வெளிவருகிறது. உதில் பல பதங்கள் முற்றுப்பெறாதவைகளாக உள்ளன. எஞ்சியுள்ள பதங்களில் அளவுக்கதிகமான சிருங்காரச் சுவை பொதிந்தவை. இதன் காரணமாக சிருங்காரச் சுவை குறைந்த பதங்கள் மட்டுமே இங்கு பதிப்பிக்கப் பெற்றுள்ளன. சுவடியில் இராக-தாளங்கள் குறிப்பிடப்பெறவில்லை. ஆதலால் நானும் ராக-தாளங்களைக் குறிப்பிடவில்லை. பல்லவி-அனுபல்லவி-சரணம் போன்ற அங்க வேறுபாடுகளை மட்டும் குறித்துள்ளேன் வசதிக்காக.

நன்றியுரை

தற்காலத்தில் தமிழிசை ஆக்கமும், ஊக்கமும் பெற்று உள்ளதாலும், இசை ஆராய்ச்சி செய்வோர் அதிக அளவில் ஆய்வுகளில் ஈடுபடுவதாலும் இந்த ராமபாரதியின் தமிழ்ப் பதங்கள் அவர்களுக்கு உதவிசெய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாட்டியக் கலைஞர்களுக்கும் இப்பதங்கள் உதவும். இந்நாள்வரை ராமபாரதியின் பதங்கள் வெளி வராமல் எட்டிலேயே முடங்கிக் கிடந்தமையால் இந்தப் பதங்கள் பற்றி ஒருவரும் அறியமுடியாமல் இருந்தது. இவைகளை அச்சில் வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற ஆவலைத் தூண்டியவர் எனது நண்பரும், இந்நூலகத்தின் தெலுங்கு மொழிப் பண்டிதருமான திரு. என். விசுவநாதன் அவர்கள். இதிலுள்ள பதங்களைச் சுவடியுடன் ஒப்பிட்டு பாடபேதம் பார்க்க அவர் உதவியுள்ளார். அவர்களுக்கு எனது நன்றி. இந்த நூலை சிறப்பான முறையில் நுண்ணாய்வு செய்தும், தக்க அறிவுரை கூறியும் உதவி செய்த, இசை ஆராய்ச்சியாளர் திரு. B. M. சுந்தரம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூலைப் பதிப்பிக்கும் பணியை நல்கிய இந் நூலக இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான டாக்டர் சூ. ராசாராமன் இ. ஆ. ப., அவர்களுக்கும், நிர்வாக அலுவலர் உயர்திரு சாமி. சிவஞானம் M.A., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் M.A., M.L.I.S., அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பாக வெளியிட என்னுடன் உழைத்த இந்நூலகத்தின் அச்சகத்துறை நண்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என். ஸ்ரீநிவாசன்,
ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சரஸ்வதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
11—2—2000

உ

ராமபாரதியின்

தமிழிசைப் பதங்கள்

பதம் — 1

பல்லவி

என்ன சொன்னாலும் உம்மை
நான் கூடுவேன் சாமி.

அனுபல்லவி

துடுக்கு நடப்பிக்க வேண்டாம் — துரையே!
சாகேந்திர! ஸ்வாமியே நீர். — என்ன

சரணம்

1. ஆடிக்கார்த்திகை பாராட்ட
வேடிக்கையாய் மலர்சூட்ட
பாடிக்கொண்டு வீணைமீட்ட
கோடிபொன்னுடமை உடலில்பூட்ட — என்ன

2. சொன்னபடியே தொடுக்க
பொன்னென் கையில் நீர்கொடுக்க
மன்னையாகவே நடக்க
என்னுடன் கூடியே அடுக்க. — என்ன

(இதில் மூன்றாவது சரணம் சிதிலம்)

பதம் — 2

பல்லவி

ஆசையானேனே சாமியுன்மேல்
ஆசையானேனே — உன் — ஆசை

அநுபல்லவி

நேசம் மறவேனே போசலகுல
சந்திர சாக ராஜனே — ஆசை

சரணம்

1. கந்தர்பன் சரமெய்ய
சந்திரன் தழல் பெய்ய
இந்த மாதர் வெய்ய
நொந்துடலம் தொய்ய — ஆசை

2. நித்தமும் நாடி
ஒருமித்து முத்தாடி
ரத்தியால் விளையாடி
குத்துமுலைமேல் கூடி
வைத்த தயவு தேடி
மெத்தவும்மனம் வாடி — ஆசை

3. காமியர் லீல !
கலியிலபிராம !
ராமபாரதி நூலால்
மனம்மகிழ் சீல !
மாமால் வந்ததுபோல
சாமி சாக பூபால ! — ஆசை

பதம் — 3

பல்லவி

எந்த வஞ்சி இந்த சகை தந்தாள் — சொல்லுமையா.
— எந்த

அனுபல்லவி

ஸந்தத வஸந்த! ஏகராஜன் தந்த
சகஜி ராஜேந்திர! குல சந்த்ர! — எந்த

சரணம்

1 சோழ ராஜ்யாதீச! உளவறியாமல்
துரைத்தனப் பெருமை தன்னையுமென்னாமல்
வாளார் விழியினில் ரஞ்சனக்குறியும்
மஞ்சள் வாடைகளும் முஞ்சவே தந்தவள்.
— எந்த

2 அம்மம்மா! மெத்தத்து ... வள் தேவரீர்
ஆதரத்தேகுறி பதறியேவைத்தள்
சம்மதியோ அவள் எந்தவூர்? எந்தப்பெண்?
சரிபோன தோகையேயோ? ஸ்வாமி குலாகையேயோ?
— எந்த

3 இங்கிதன்! ராமபாரதி போற்றிய
ஏகராஜேந்த்ரன் இன்பகுமாரா!
சங்கீதலோல! சாகராஜேந்த்ரா! உன்னை
தக்கவைத்துக்கொண்ட சொக்குப் பொடிக்காரி
— எந்த

பதம் — 4

பல்லவி

விந்தையாச்சையா என் சாமி — மெத்த
விந்தையாச்சையா ! — விந்தை

அநுபல்லவி

விந்தையாச்சையா சும்மா நீர் – என்
வீடு வந்தீர் சேர சாகஜி ராஜ ! — விந்தை

சரணம்

1 பொன்தந்ததுண்டானால் அதற்குச்சாட்சியுண்டோ ?
தீர ! எந்தன் உடம்பு உமக்கல்லாலெதற்கோ ?
சந்தோஷமோ லவலேசமில்லை ஸ்வாமி !
சாகராஜேந்திர ! கம்பீர சகல குணாதார ! —விந்தை

ஜாலமிகப் பேசுதீர் சுகந்த கஸ்தூரி மேலில் பூசுறீர்
கோலம் செய்தால் உடமை சேலைகொடுத்துக்கொப்போ
நாலு பெண்கள் முன்னே இது நயமாகிய மெப்போ
காலம் போற்றித் திரியவும் கைக்கண்டேன் நான் —விந்தை

கவிராமபாரதி ! விநுத ரம்ய குணவானே !
சோழபூமிபால ! சாகராஜ பூபாலனே !
பொன்தந்தால் நான் சேருவேனே !
பொய்யெல்லாம் மெய்தானே ! — விந்தை

பதம் — 5

பல்லவி

நீரினில் தாராவே! — கண்கள்
நித்நிரை தாராவே. — நீரினில்

அனுபல்லவி

சீர்பெறும் சகஜியே — வந்து
சேரிலா சகஜியே.

சரணம்

1 காவினில் அஞ்சுகமே! — ...
பாவிரா வஞ்சுகமே! — நீரினில்

2 ஆவியா ரம் புயமே — என்னை
மேவிலா ரம் புயமே. — நீரினில்

3 தொய்யச் சஞ்சலமே — அவர்
தொய்யாத சஞ்சலமே. — நீரினில்

4 ஆறுகாலான வண்டே — இன்னை
அழைத்துவா ராய்ந்துவண்டே — நீரினில்

5 தேறும் களினீரே — கண்கள்
சேரும் களினீரே. — நீரினில்

6 கோலக் கரும்பனையே — கும்ப
... ... கரும்பனையே. — நீரினில்

7 பாரதிராமன் மகிழ் — சாக
பூபதி மேவஉத் யானமே. — நீரினில்

பதம் — 6

பல்லவி

மோகம் மிகவானேனே
மோடி என்மேல் செய்வானே — மோகம்

அனுபல்லவி

சாகராஜ பூபால
ஸரஸ ஸங்கீதலோல. — மோகம்

சரணம்

1 மதனன் கணையா லெய்ய
மதியும் செந்தழல் பெய்ய
அதனால் என்னுள்ளம் தொய்ய
அடக்கக் கூடாதென் செய்ய — மோகம்

2 உன்னை நம்பினன் நானே
ஒருநாளும் பிரியேனே
என்குறை செய்தேனே
இன்னம் உன் பாரந்தானே. — மோகம்

3 ஏகபூபதி பால! ராமகவிக் கநுகூல
சாகராஜபூபால தழுவும் வஞ்சியர்லீல *
... ...
... ...

* இந்தப்பதம் பூர்த்தியில்லை.

பதம் — 7

பல்லவி

ஆரையா உந்தனைச் சேர்ந்தவள் - சாக
நாசேந்திரனே ! — ஆரையா

அனுபல்லவி

1 நரராஜன் என்றெண்ணாமல்
நயமாய் முத்தாடி
திருநுதலில் கஸ்தூரி
தீட்டினாள் நகம் நாட்டினாள் — ஆரையா

2 மதன சன்னத்தமாகி மலரணைமீதே
அதிகரதி கேளிக்கை ஆடினாள்
— உன்னைப் பாடினாள் — ஆரையா

3 ராமபாரதி புகழ் ராஜ சாகேந்திரர்
ஆமெனவே அணைந்தால் ஆசையோ ?
- கொலுத் தாஸியோ ? — ஆரையா

பதம் — 8

பல்லவி

ஒண்டி ஒருத்தியல்லவே

அனுபல்லவி

ஒண்டி ஒருத்தியல்ல பெண்டாயிருக்கவே உத்தண்ட
மண்டலாதீச ! சாகேந்திர ! — ஒண்டி

சரணம்

[1]தெட்டிக்காலம் பொட்டுத் திருநீரிட்டு
ரொக்கம் தருவார் போலே கண்காட்டி,
செட்டுப்பாராட்டினால் சில்வுக்காமோ ?
[2]காசாப்பற்றுதந்தால் எங்கள் பசிபோமோ ?

அல்லும் பகலும் வந்து வெல்லச்சாறுவிட்டேன்
இல்லம் பிரியாமலே யிருந்துகொண்டு
கல்லுமிளகப் பேசி வெல்லும்படியாகவே
சொல்லும் வார்த்தை உண்ணச் சோறாமோ ?

ஆமெனும் தமிழ்பாரதி புகழ் சோம !
சாகேந்திர ! என் சாமி வாரும்
காமமதிகமானால் கலந்துசேரும்-பொன்னைத்
தாமதஞ் செய்யாமல் தந்தால் வாரும் — ஒண்டி

பதம் — 9

பல்லவி

அந்த வஞ்சியின் மேல் நீர்
ஆசை கொள்ளலாமோ ? — அந்த

அனுபல்லவி

சந்தத வஸந்த ! தஞ்சை
சாகராஜ தீர ! — அந்த

---

1. ஏமாற்றுதல், வஞ்சித்தல்
2. காசாப்பற்று – தனது பற்றின்றி

சரணம்

1 தருணி நல்ல பருவமோ?
தனமென்னபூச் செண்டோ? —உன்
வரிசை அறிவாளோ?
நல்ல மரியாதை தானுண்டோ? — நல்ல
சுருவமோ? அதரம் பலாச்
சுளை தானோ? கற்கண்டோ? இங்கே
வருவது கண்டல்லோ சாமி
மையல் கொண்டீர்! பெண்டோ?
— அந்த

2 ஏகராஜனருள் மகாராஜ க்ருபால! — மிக்க
நாகரிக ராமகவிக்கநுகூல! — தஞ்சை
சாகராஜ மகிபால ஸத்குண விசால — மெய் வி
வேக இல்லாள் அவளல்லாமல் வேறில்லாதுபோல.
— அந்த

பதம் — 10

பல்லவி

அந்தா! வந்தாளையா - மெத்த
விந்தைக்கரிபாரும் — அந்தா

அநுபல்லவி

ஸந்தத வஸந்த! தஞ்சை
சாகராஜ தீர! — அந்தா

சரணம்

ரதிலீலையில் அவனிராஜர் மெப்பு
புதுமையான அபரஞ்சி குழையில் கொப்பு
அவளதரபானம் சர்க்கரையினும் தித்திப்பு
கீதமோ மதுரவாணி; தேவரீர்க்குவைப்பு — அந்தா

போஸல வம்சாதிகார ! புதஜனோபகார
சோழ தேசாதிகார ! ஒய்யார ! சிங்காராவதார
சத்யபாஷா ஹரிச்சந்திர ! தஞ்சைப்பதியின் குபேர
ஏகராஜனருள் குமார ! ரம்யகுண ஹார ! — அந்தா

பதம் — 11

பல்லவி

வரவும் மனது கூடுமோ! - தேவரீர்க்கிங்கே — வரவும்

அனுபல்லவி

வரவும் மனது கூடுமோ ! வஞ்சிஉத்தாரமோ ?
தரணி உதயசந்திர ! சகஜி ராஜ தேவேந்திர ! — வரவும்

சரணம்

அந்தவஞ்சிதந்த தங்கரேகையுனக்கு
அந்தமாச்சுது என் மனம் சந்தோஷமாச்சுது
விந்தைக் காரியம் ! அந்தச் சொந்தக்காரியைவிட்டு
சிந்தைதிரும்பிமெள்ள எந்தன் வீதி வழியாய் — வரவும்

மாதவளிருமுலை மீதினிலணிந்திடு – சவ்
வாது தேவரீர்புஜமீது வாடைவீச
சோதனை யறியநான் தூதியும் அனுப்பாமல்
பாதவ தானமாய்ச் சங்கீதம் பாடிக்கொண்டு — வரவும்

இன்சொல் இராமபாரதி இசைக்கும், தனகுபேர
தஞ்சாபுரி வாழ்தீர ! சகஜிராஜ ஒய்யார !
பஞ்சசயனமீதில் கொஞ்சியணைந்தீர் ! அந்த
வஞ்சியறிந்தால் மெத்த மிஞ்சும் எச்சரிக்கையாய் —வரவும்

பதம் — 12

பல்லவி

வந்துபாரும் அவளை நீர் — உகந்து சேரும். — வந்து

அனுபல்லவி

சந்த்ரமுக பிரஸன்ன
சகஜிராஜ ஸம்பன்ன

சரணம்

1 அதரமோ இந்திரகோபம்[1]
அதிசயம் அவள்ரூபம்
மதனலீலையில் லாபம்
வரும் சாமிக்குப் பிரதாபம் — வந்து

---

1. இந்திரகோபம் என்பது மழைக் காலத்தில் தோன்றும் ஒருவகைப் பூச்சி. இது சிவப்பு நிறமாக இருக்கும். தரையில் ஊர்ந்து செல்லும். இங்கு உதட்டின் நிறத்திற்கு அதன் வண்ணம் உவமையாகக் கூறப்படுகிறது.

2 உலகில் இவள் பிரசித்தம்
உன்மீதில் ஆசைசித்தம்
தலைவி, அவளோர் முத்தம்
தந்தால் சுகம் கரஸ்தம்.[1] — வந்து

3 இந்திர! அளகை ஊர!
ராமகவிக்கு உபகாரா!
சந்திர! கர்ணாவதார
சகஜி ராஜ ஒய்யார! — வந்து

பதம் — 13

பல்லவி

இந்த மோகம் தந்த சாமிக்கு
இரக்கமில்லை என்ன செய்வேன்? — இந்த

அனுபல்லவி

சந்ததம் புகழ்சேர் சாகராஜனுக்கு
என் தனிமை சொல்லவொரு சகியெயும் காணேன்.
— இந்த

சரணம்

1 சோமகிரணந் தழல்போல் சொரிய
காமசரமுமென் காயம் துளைக்க
ராம! ராம! வெகு காமினியின்றென்னை
ஓமல் செய்வாரல்லால் உரைப்பாரைக் காணேன்.
— இந்த

---

1. கரஸ்தம்: உள்ளங்கை நெல்லிக்கனிபோல உறுதி யானது.

2 பஞ்சநதம் ராமகவிக்ருபாலன்
பாகசாசனனாம் சாகபூபாலன்
வஞ்சியே! ஆதியில் சேர்ந்த சுரதம்போல்
மருவாமல் என்மனம் சருகாய்வாட. — இந்த

பதம் — 14

பல்லவி

மோகம் மிகவானேனே
மோடி யென்மேல் செய்வானேன் — மோகம்

அனுபல்லவி

சாகராஜேந்திர னான
சாமி உன்னை நம்பினேனே — மோகம்

சரணம்

இரவும் விடியாதாமோ
என்னுடல் வாடினோமோ ?
பருவமும் வீணே போமோ
பாராமுகமும் செய்யலாமோ ? — மோகம்

இராமபாரதி சொல் சீல !
சாகராஜ பூபால !
காமனுடன் ரதிபோலக்
கலந்துசேர் ! கானலோல ! — மோகம்

பதம் — 15

பல்லவி

எந்தமாது? அவளைவிட்டு வந்ததேது? — எந்த

அநுபல்லவி

எந்தனைத் தொடாதே நில்லும்
ராஜ சாகேந்திர! சொல்லும் — எந்த

சரணம்

1 உன்மேல் ஆசையானாளோ!
உச்சிதலீலை செய்வாளோ!
என்மேல் விந்தை செய்வாளோ!
ஏதுசொல்லிக் கலைத்தாளோ! — எந்த

2 விரகம் உன்மீதில் உண்டோ?
மின்னாள் இதழ் கற்கண்டோ?
இருமுலையும் பூச்செண்டோ?
இளந்தை;* அவள்தான் பெண்டோ?
— எந்த

3 ராமகவி தமிழ் கொண்ட
ராஜ சாஹேந்திர! உத்தண்ட
சாமி சொல்லும்! என்றுசொன்ன
தயவவள் மீதிலுண்டோ! — எந்த

---

* இளந்தை — குழந்தை. இளவயதுடைய பெண்.

பதம் — 16

பல்லவி

ஆசையாகவே யுள்ளாக்கிக் கொள்ளாயோ !
நேசமாகவும் என்னேரமும் அடியோ ! — ஆசை

அநுபல்லவி

ராஜசேகரன் ஏகராஜகுமாரன் - தாச
ரதி சமான சாகபூபாலனை — ஆசை

சரணம்

1 பஞ்ச சயனமீதில் ஏறியிருந்தே - அவன்
பாதகமலம் பிடித்தே யடியோ ! பெண்ணே
ரஞ்சிதமாகவே அபிநயம் பிடித்து நீ
ரதியில் மெப்பாகவே மதனகேளிக்கையாடி —ஆசை

2 ஏகராஜனருள் சாகமகிபாலன்
இன்பமாகச்சேரவே யடியோ ? பெண்ணே
பாகிதழ் முறைக்கோதி யேகசம்போக
வைபோகமுமாகவே நாகரிகமாக — ஆசை

பதம் — 17

பல்லவி

மருவப் பருவமான வஞ்சி பாரும் - சாமி
விரகமானாள் அவளை மேவிச் சேரும் — மருவ

அனுபல்லவி

சரஸவிதரண குண ! கானலோல
[1]விருதஞ்சை நகர் மருவிய சாகபூபால — மருவ

சரணம்

கொங்கையிணை பூர்ண கும்பத்திற்கொப்பு - அவள்
கொவ்வையதரம் மெத்தத்தித்திப்பு
அங்கமோ குங்குமப்பூவிலும் சிவப்பு
பாடலிலே [2]காந்தர்வதத்தையின் மெய்ப்பு[3] —மருவ

மந்தகஜகயனம் போல் வாராள் பாரும்
இங்கே வரவே சாமி ! ஒரு [4]கில்லாக்குத் தாரும்
அந்தவஞ்சிக் கிப்போது தன் மையல் தீரும்
கூடியணைந்து மன்மதலீலையாகச் சேரும் — மருவ

ஏக சக்ர பதியான ராஜன் பால !
புகழ் ராமபாரதி போற்றும் கானலோல !
லோகஜன பரிபால ! மிக்கசீல ! - தஞ்சை
சாகபூபால ! க்ருபால ! ரதிலீல — மருவ

---

1. இரு — பெரிய
2. காந்தர்வதத்தை - இசையில் வல்லவள் - சீவக சிந்தாமணியில் ஒரு தலைவி.
3, மெய்ப்பு : ஒப்பு
4. கில்லாக்கு — அதிகாரச்சீட்டு

பதம் — 18

பல்லவி

சேர வருவானடி நான் சொன்னபடி
தேனே! விளையாடடி — சேர

அனுபல்லவி

தாரணி புகழ் தஞ்சை சாகராஜேந்திரன் உன்னை — சேர

சரணம்

1. கொந்தளகத்தில் மலர் சூட்டிக்கோ! – இரு
கொங்கை காட்டி சற்றே மூடிக்கோ
அந்தமாகவே பதம் பாடிக்கோ
அபிநயம் பிடித்துக்கொண்டு ஆடிக்கோ —சேர

2. பவனிமுன் எதிராகச் சுற்றடி – அவன்
பக்ஷம்வர இச்சகம் சொல்லடி
அவன்மேல் கவனமாக நில்லடி – உன்மேல்
கருணைகூர்ந்தால் அவனை மெல்ல புல்லடி –சேர

3. தேவசோளராஜ்ய பரிபாலன் – கீர்த்தி
சேஷித்த ஏகராஜன் தருபாலன்
மேவலர் பரவிய பதசீலன் – அவனே
ஜயவிஜய சாகேந்திர பூபாலன் — சேர

பதம் — 19

பல்லவி

விந்தையாச்சையா ! சாமி இது —விந்தை

அனுபல்லவி

[1]சந்தத கனகவஸந்த ! ஏகராஜேந்திரன்
தந்த சகஜி ராஜேந்திர ! ஹரிச்சந்த்ர !! —விந்தை

சரணம்

1. அந்த வஞ்சிமுலையில் சந்தனப் பூச்சும்
அவள்பேர் சொன்னவுடன் நெடுமூச்சும்
எந்த நேரமும் அவள் தன்னுட பேச்சும்
எந்தன்முன் தேவரீர் வந்த கைவீச்சும் —விந்தை

2. விரஹம் அவள் மீதிலோ ? என்னுடன் வெல்லும்
எந்தன் முந்தானைப் பிடியாதீர் நில்லும்
பருவ மோகினியானால் அவளுடன் அல்லும்
பகலும் பிரியாமலே [2]பக்ஷமாய்ச் செல்லும் —விந்தை

(இதன்பின் ஏட்டில் பதமில்லை)

---

1. எப்பொழுதும் 2. பக்கம்

பதம் — 20

பல்லவி

மோகமான எந்தன் மீதிலே சாமி — நீ இந்த
மோடி செய்வது நீதியாகுமே? — மோக

அனுபல்லவி

ஏகராஜனுதவு குமார! ராஜ
சகஜி நரேந்திர! குண சந்திர! — மோக

சரணம்

1 ஆதிமுதலுன்னை நம்பினேனே
அநங்கன் புஷ்ப சரத்தாலெய்வானே!
காதல் மனத்திலடக்கறியேனே
கருணைசெய, தேவரீர் பாரந்தானே! —மோக

2 சந்திர கிரணம் அதிகடூரம்
சகிக்கப் போகுதில்லை அய்யா! என்னேரம்
மந்தமாருதம் வந்தே விகாரம்
வருத்தும் மாலைநேரம், சொல்லு முத்தாரம்
— மோக

3 ஏகராஜன் தரு குமார!
ராமபாரதி புகழும் ஒய்யார!
சாக ராஜதீர! கம்பீர!
சந்ததம் எந்தனை வந்து நீசேர. — மோக

பதம் — 21

பல்லவி

ஏனோ வாரான் என் பிராணநாதன்
ஏனோ வாரான் — ஏனோ

அனுபல்லவி

1 ஏனோ வந்திலன் என்செய்வேனே
வா ... ... மெலிந்தேனே
தான சூரனான வரகுணவானே
ஆன சாகராஜேந்திரன் தானே — ஏனோ

2 அங்கஜன் வாளி நெருக்கவுமே – இரு
கொங்கை மீதினில் அங்கிளாகவும்
மங்கையரேசவும் மனங்களையாகின
தங்கவர் கூறுவர் அங்கமும் வாடிட —ஏனோ

3 செந்தமிழிராமன் நிரந்தரமும்புகழ்
சுந்தர சகஜி புரந்தரன்
விந்தையினில் வந்து கலந்து தினம் தயவின் சுக
சிந்தை பிரிந்து மகிழ்ந்து அணைந்தவன் — ஏனோ

பதம் — 22

பல்லவி

கண்டேன் கண்டேன், உன்பேச்சு — நீ
செய் காரியத்தில் இது வெளியாச்சு
— கண்டேன்

அனுபல்லவி

மண்டலீகர் பணிபாத! கானலோல!
சாகமகீ பால! மங்கையர்கள் மார! லீல!
— கண்டேன்

சரணம்

1 அந்தவஞ்சி வளவினில்[1] என்னேரம் — உமக்கு
ஆசையாக விருக்கு ஆரவாரம்
எந்தன் வீட்டில் வருவதும் சிங்காரம் — சும்மா
ஏடாகோடமாகக் சொல்வீர் உத்தாரம்
— கண்டேன்

2 பாலும் பதக்குமோரும் பதக்காச்சு — மனம்
பழகிப்போன தெல்லாம் ஜாலமாச்சு — அப்
பாலை[2] மோகந்தன்னில் நினைப்பாச்சு — இங்கே
வந்தபோதெல்லாம் பெருமுச்சு. — கண்டேன்

3 பைந்தமிழ் ராமபாரதி புகழ்சீல! — தஞ்சைப்
பதியில் மருவும் சாக மகிபால
அந்த வஞ்சி மேதவர்க்கு ரதிபோல கூடி
அநுபவிப்பாளோ இனி என்னைப்போல.
— கண்டேன்

---

1. வீடு; வீட்டுப்புறம். 2. பெண்.

பதம் — 23

பல்லவி

ஆருங்கொள்ளா மோகம் கொண்டேன் ! –உம் மீது
இப்படி நீர் வஞ்சிக்கலாமோ ? — ஆருங்

அனுபல்லவி

தாரணி புகழும் ஏகராஜன் தந்த
ராஜதிர ! ஒய்யார ! — ஆருங்

சரணம்

1. நானொருத்தியுமோ ! பெண்பிறந்தவள்
நாட்டில்அபூர்வமோ ! நான் கொண்டகாதல்
ஆனாலுமிப்படி நீர் நிஷ்டூரம் செய்யலாமோ ?
... ... இது பொருக்குமோ ? — ஆருங்

2. தானே தனியாக வருந்தி இருந்து
தயவாயினி மேவிய சந்தோஷம் நினைந்து
மீனமேஷமெண்ணி வருவீர்வருவீரென்று
மற்றும் நானொரு நொடியும் துயிலாமல்
— ஆருங்

3. சிவ ! சிவ ! முன்னைநான் யாரைப் பிரித்தேனோ ?
தெய்வமிப்படியே ! சோதனை செய்யுதோ ?
'அவசியம் தனியாய் இருப்பாயென்று'
அயன் விதித்த விதியோ ? — ஆருங்

4. கவன மனதுக்கு மனதே சாட்சியென்ற
காரணவார்த்தையும் கதையாய் முடிந்ததோ !
அவரவர் பூஜாபலத்தின் வழியே
ஆசைலபிக்குமென்று என்னளவில் கண்டேன்
— ஆருங்

5. ஸரஸ கவி ராமபாரதி புகழும்
சாமி சகஜிராஜ ... ... தேயே

(இதற்குப் பிறகுள்ள பதமில்லை)

பதம் — 24

பல்லவி

வந்தாளையா உந்தனைத்தேடி
வந்தாளையா உந்தனைத்தேடி — வந்தாள்

அநுபல்லவி

அந்த வஞ்சியார் நீர் சொல்லுமையா
சகஜி ராஜதீர ! உந்தனைத் தேடி. — வந்தாள்

சரணம்

அம்சம் போல நடனமாடி — உன்மீதில்
கொஞ்சிக் கொஞ்சியே பதம்பாடி — பத்துமாத்து
அபரஞ்சிபோல் மின்னி விளையாடி
கொண்டாடி,நாடி வஞ்சியர் முன்னோடி
மனமார வுன்னைத்தேடி. — வந்தாள்

மங்கை,பருவ வயதுண்டு — செங்கமல
மானம்* கைக்கிவள் சரிநிகண்டு — இவளுடைய
கொங்கைக்குவமை மலர்ச்செண்டு — உன்னை
அந்தரங்க மாகவே காணவருவள்
காணிக்கை கொண்டு. — வந்தாள்

ராமபாரதி போற்றும் நாம—சர்வக்ஞன் இவன் (என்று)
நாமமென வாழ் சார்வபௌமம
பிரும்ம பூயிஷ்ட பூமிபாலன் அபிராம — சாக
ராஜேந்திர சாமி! உந்தனை மேவதருணி சரிபோமா ?
— வந்தாள்

பதம் — 25

பல்லவி

மோகமானேனே உந்தன்மேல்
மோகமானேனே என் சாமி — மோக

அநுபல்லவி

மோகமானேன் மோடி செய்வானே
வாக சாகேந்திரனே ! என் சாமி — மோக

சரணம்

மாரராசன் வாளியால்
மனதுவாடி நோகுமோ
மதிநிலவு வீசவே
மங்கையர்கள் ஏசவே — மோக

வாது நீ செய்யவும்
நீதியோ சாமியே
ம ... தவள் போதனையோ

* அளவு, போல

வாது என் மீதே
    ஏதும் நீ செய்யாதே
காதல் பொல்லாதே
    காணுவீர் சாமிநீர் — மோக

கொங்கைமேல் சந்தனம்
    அங்கிபோல் ஆமோ
எங்கள்மேல் மோடி
    ... ...
இங்கித மாகவே
    திங்கள் நிலாவிலே
பொங்கமாய் யென்னைசேர்
    சங்கீத கானப்ரவிண ! — நல்ல
இங்கித சத்குணஜான
    துங்கமா மேடையில் கஜராஜனே
வங்கணமாகவே உம்மிடத்தில் நான். — மோக

சந்ததம் ராமையபாரதி போற்றிய
    சாகராஜேந்திரனே !
அந்தரங்கத்துடன் சந்திரன் ரோகிணி
    யாமெனக் கூடுமையா
புந்தியனலதிருப ! நல்ல
    போசல வம்ச ப்ரதீப
உந்தனை நம்பினேன்
    நிந்தை செய்யாமலே
யெந்தனை யாளுமையா. — மோக

பதம் — 26

பல்லவி

அவளைவிட்டுப் பிரிந்த கவலையுடன் தேவரீர்
அடியேன் வீட்டில் வருவானேன் — அவளை

அனுபல்லவி

நவமார! தஞ்சையில் சகஜீந்திரா! இது
லோக நியாயமோ சொல்லுமையா - என்சாமி
— அவளை

1 ஆசையோ மரத்திண்மை[1] பதம் போலே
இருவருக்கும் ஆக ஒருமித்தலாகும்
காசினியில் வழக்கமும் கழுக்கரமனைக்[2]
கட்டாயம் எங்களுக்குண்டோ? பொழுதுபோக்கோ
— அவளை

2 எட்டுவிதமாம் காமமெமக்கோ! உமக்குமுண்டோ!
இதுலாபம் காணவந்தீரோ!
மட்டார் குழலாள் கண்டால் பொறுப்பாளோ
பொறுத்தாலும் மனதுக்குத் தரிக்குமோ
தேடவே போராள் — அவளை

3 குலவும் ராமபாரதி புகழ்ந்தருளும் - போ
சலகுலத்தில் சாக ராஜேந்திரனே!
நிலவரம் தெரியாதோ! என்லீலை யறியீரோ!
நிலைகண்டிரங்க வேண்டாமோ!
என்ன போம் போம் — அவளை

1, வலிமை, உறுதி, கலங்கநிலைமை
2. பதம் பிழையாக உள்வது

பதம் — 27

பல்லவி

மருவக்கிடைத்தால் அது பாக்யம் — என்சாமிகூட
அரிவையர்க்கதுவே யோகம். — மருவ

அனுபல்லவி

சுரதம் செய் நான் சொன்னேன் குருவாக்யம்
ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தாப்போல சிலாக்யம்
சாகராஜனே — மருவ

சரணம்

1 ஸங்கீதம் விதமாகப் பாடவேணும் அபினயம்பிடித்து
இங்கிதமாக ஆடவேணும் — என்சாமிக்கு,அந்த-
ரங்கமாகக் கூடவேணும் ஒருமனதாகப்
பொங்கமாக விளையாடவேணும் உளவுசொன்னேன்.
— மருவ

2 போசலவம்ச பரிபாலன்
ஏகராஜனாம் நிருபதிசொல் பாலன்
ராமபாரதிமேல் நேசமாம் பூபாலன்
அன்பாய் ஆசையானானே அனுகூலன். — மருவ

பதம் — 28

யாலபதம்

மோகம் அடங்குதில்லை சாகேந்த்ரா – என்மேல்
மோடி செய்யலாகுமோ சாகேந்த்ரா

ஆகமுலை மெழுகாமோ சாகேந்த்ரா – என்னை
அணையாத கோபமேது சாகேந்த்ரா

பேராசை கொண்டார்ரோ சாகேந்த்ரா – சும்மா
பெண்ஜன்மமாகுமோ சாகேந்த்ரா

உரோமலால் மெலிவேனோ சாகேந்த்ரா - வேரே
ஒருவர் துணையும் காணேன் சாகேந்த்ரா

திங்கள் செந்தழல் வீசுமோ சாகேந்த்ரா – இளந்
தென்றலைகொங்கைகள் தாளுமோ சாகேந்த்ரா

மங்கையர்க்கூடி ஏசுவாரோ சாகேந்த்ரா – உந்தன்
மனதினில் தயவில்லையோ சாகேந்த்ரா

காதல் பொல்லாது சாகேந்த்ரா – நெஞ்சில்
அடிக்கக்கூடாது சாகேந்த்ரா

ராமபாரதி விநுத சாகேந்த்ரா – மலர்
காமன் கணையால் வாடவோ சாகேந்த்ரா

பதம் — 29

பல்லவி

எத்தனை சகிமார்கள் சகியாமல் சொன்னாலென்ன
இருவர்க்கும் மனம் ஒன்று காண் — எத்தனை

அநுபல்லவி

வித்வத்ஜனபரிபாலன் சாகேந்திரன் என்னையல்லால்
வேறொருத்தரையும் சேரான் — எத்தனை

சரணம்

[1] போசலவம்ச அதிகாரன் ராம பாரதிபுகழ் ராசன்
சாகமகிபாலன் நேசமாய் அநுராகமாய் - சரி
போக மானலீலை பூசல் மூட்டும் உத்தி
யோகமாய் அநுகூலம் போவ — எத்தனை

1. முதலிரண்டு சரணங்கள் ஏட்டில் முழுமையாக இல்லை.

அனுபந்தம் :

பதம் — 5ின் பொருள் :

கீழே உள்ள பதங்களின் சொற்களைப் பிரிக்க இரு பொருள்கள் வரும். அவையாவன :

அனுபல்லவி :

1. சீர்பெறும் சகஜியே வந்துசேரில், 'ஆ' வியப்புக் குறி. வந்து சேரில் ஆ சகஜியே! என்றும்,

2. வந்து சேரிலாத சகஜியே—வந்து சேராத சகஜியே என்ற பொருளிலும் வரும்.

சரணம்

1 — 1. காவினில் — பூங்காவில், சுகம் — கிளி என்ற பொருளிலும்,

2. கா-இனில்-அம்-சுகமே — விரும்பியதை அளிக்கும் கற்பகம் போன்று இன்பம் நல்குதல் என்றும் பொருள்,

1. பாவி ரா — கொடிய இரவு,

2. பா - இரா — பருகுதல் அற்ற இரவு.

2 — 1. ஆவியாரம் புயமே — மணம் பொருந்திய மாலை உள்ள புயம்.

2. ஆவி யார்? அம்புயமே — சகஜி மன்னனுக்கு ஆவி - உயிர் போன்றவர் யார்?

1. மேவிலார் அம்புயமே — என்னை மேவாதவர் - அணையாதவர் அம்புயமே,

2. என்னை 'மேவில் ஆரம்புயமே' — என்னை மேவினால் புயம் மாலைபோலமையும்.

3 — 1. தொய்தல் — இளைத்தல், வாடுதல், துவளுதல் சோர்தல் — இதன் காரணமாக மனம் சஞ்சலம் அடைகிறது.

2. தொய்யாத — வினை செய்யாதமையால் மனம் சஞ்சலம் செய்கிறது.

4 — 1. ஆறு கால் ஆன வண்டே! — என்னைத் துன்பம் செய்கிறவனை அழைத்து வாராய். (இன்னை — துன்பம்).

2. என்னைத் துன்பம் செய்கிறவனை அழைத்துவா — ஆய்ந்து வண்டே. அவள் மனநிலையை ஆராய்ந்து அழைத்துவா வண்டே.

5 — 1. களிப்பைக் கொடுக்கும் தேறல் — தெளிந்தகள்,

2. உறுதியாகக் களிப்படைபவர் நீரே; அதனால் ஏற்படும் மகிழ்ச்சியினால் கண்களில் ஆனந்த பாஷ்பம் சேரும்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
20-2-2000.

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

(SARASVATI MAHAL LIBRARY PRESS, THANJAVUR)